Registered as as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 2 15 4 94 வெள்ளிக்கிழமை ஓசை 56

## தமிழ்மொழி ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப அரசு அனுமதி மறுப்பு

தமிழ்மொழி மூல பயிலுநர் ஆசிரியர் வெற்றிடங்கள் நாடு தழுவிய ரீதியில் பல ஆயிரக் கணக்கில் இருந்த போதும் ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கே அரசு அனுமதி அளித்துள்ளதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன. இது பற்றி மேலும் தெரியவருவதாவது: தமிழ்மொழி மூல பயிலுநர் ஆசிரியர் வெற்றிடங்கள் நாலாயிரம் அவசரமாக நிரப்பவேண்டி இருப்பதாகவும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு அரசிடம் அனுமதி கோரியபோது அரசு கல்வி அமைச்சு கேட்டதில் நாலிலொரு பங்கை அதாவது ஆயிரம் வெற்றிடங்களை மட்டுமே நிரப்புவதற்கு அனுமதி அளித்துள்ளதாக தெரியவருகின்றது. (இ, ச)

# சமாதான முயற்சி தேவையில்லை

# ஜனாதிபதிக்கு தேர்தலே முக்கியம்

## யுத்தத்திற்குத் திட்டம் தயாராகிவிட்டது

## தென்பகுதி துறைசார் வல்லுனரிடம் தெரிவிப்பு

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பொறுத்து தேர்தல் தான் முக்கியமாகவுள்ளது. தேர்தல் பிரசாரம் ஒன்றிற்கான யுத்தத்தைப் படையினர் திட்டமிட்டு வருவதால் இவ் வேளை சமாதானம் என்ற பேச்சுக்கள் சாத்தியப்படாது. எனவே இது தொடர்பாக எந்தப் பேச்சு வார்த்தைகளிலோ அன்றி முயற்சிகளிலோ ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளவே ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா விரும்புகிறார்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் தம்மைச் சந்தித்த தென்பகுதி துறைசார் வல்லுநர்களிடம் தெரிவித்தார். தென்பகுதி துறைசார் வல்லுநர்கள் ஜனாதிபதியை இரண்டாம் தடவை சந்திக்க எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதியின் செயலாளரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக தென்பகுதி துறைசார் வல்லுநர் அமைப்பு மேற்கொண்டுவரும் முயற்சிகள் பிசுபிசுத்துப்போகும் நிலையில் இருப்பதாக தெரியவருகின்றது. படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அவ்வேளை ஜனாதிபதி இதனை பரிசீலிப்பதாக கூறினார்.

இதன் முடிவுகளை கேட்கும் பொருட்டு இவ் அமைப்பு ஜனாதிபதியை சந்திக்க முயன்றதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் மூலம் தெரியவருகின்றது. ஜனாதிபதியின் இந் நடவடிக்கை தொடர்பாக துறைசார் வல்லுநர்கள் மனவருத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பனையில் வேட்டைக்கு சென்றவரின் வேட்டைத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் படுகாயமடைந்தார்.

கச்சாய் சாவகச்சேரியை சேர்ந்த செ. மகேந்திரன் (வயது 45) என்பவரே நேற்று முன்தினம் காலை வேட்டைக்கு சென்ற போது தனது துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்தவராவார். (இ, ச)

## தொண்டமானுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் டி. பியிடம்

(லண்டன்)

தொண்டமானுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடிதமொன்றை இன்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு சமர்ப்பிக்க உள்ளதாக இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் அமைச்சரவையின் கூட்டு பொறுப்பை மீறும் வகையில் அமைச்சர் செள. தொண்டமான் செயல்பட்டுள்ளார் என்றும் இதனாலேயே இம் முடிவுக்கு வரவேண்டி ஏற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து தன்னை நீக்குமாறு அமைச்சர் செள. தொண்டமான் ஐ. தே. க. பொதுச் செயலாளர் சிறிசேன கூரேக்கு கடிதம் அனுப்பியிருப்பதாகவும் இது விரும்பத்தகாதது என்றும் காமினி திசாநாயக்காவினால் ஏற்பட்ட நிலை இன்று உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இது இன்னும் தீர்க்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய மாகாணத்தின் ஐ. தே. க. முதல் அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை தான் உட்பட தனது ஆதரவான உறுப்பினர்களாலேயே முறியடிக்கப்பட்டதாகவும் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. அமைச்சரவையில் இருந்துகொண்டு இவர் செய்த செயல்கள் அவரின் பொறுப்பற்ற தன்மையை காட்டுவதாகவும் இது தொடர்பாக ஏப்ரல் மாதம் 18-ம்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வெருகல் முகத்துவாரம் பகுதியில் 10 பொதுமக்கள் கைதாகினர்

(திருகோணமலை)

திருகோணமலை- வெருகல் முகத்துவாரம் பகுதிக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் பெண்கள் உட்பட பத்துப் பொதுமக்களைக் கைது செய்துகொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது கார்த்திகேசு சிவராசா (19) மாவடிச்சேனை வெருகல் முகத்துவாரம், சின்னராசா பத்மன் (24)

### வடக்கு- கிழக்கு போர்முனைக்கு

## இந்தியாவில் பயிற்சி பெற்ற 400 இராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

இந்தியாவில் விசேட பயிற்சியை பெற்ற இராணுவ இது குறித்து தற்போது இராணுவத்தைச் சேர்ந்த சுமார் நானூறுக்கு மேற் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். இராணுவத்தினரை நவீன

திருகோணமலை- வெருகல் முகத்துவாரம் பகுதிக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் ... பொதுமக்களைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் இடம் ... போது ... ராசா (19) மாவடிச்சேனை வெருகல் முகத்துவாரம், சண்முகநாதன் பதிமன் (24) வெருகல் முகத்துவாரம், மயில்வாகனம் இளிவாழைத் தோட்டம், முகத்துவாரம், கதிர்காமத்தம்பி சரோஜா முகத்துவாரம், மயில்வாகனம் இராமையா (18) வாழைத் தோட்டம் முகத்துவாரம் கந்தவேல் லலித்தா (28) முத்துச்சேனை, மாவடிச் சேனை வெருகல். தங்கராசா நந்தகோபால் வாழைத் தோட்டம் ஜீவரட்ணம் லலித்தா (28) வாகரை, காளி ராசா, முத்துச் சேனை, திருமதி தயானந்தம் வெருகல் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

... பிசுபிசுத்துப்போகும் நிலையில் இருப்பதாக தெரிய வருகின்றது.

சென்ற முறை இக் குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து சிங்கள - தமிழ் புத்தாண்டின் பின்னர் ஒரு சமாதான ஆண்டை பிரகடனப் ...

(கொழும்பு)

இந்தியாவில் விசேட பயிற்சியை பெற்ற இராணுவ அதிகாரிகளே வடக்கு கிழக்கு இராணுவ முகாம்களுக்கு நியமிக்கப்பட இருப்பதாக இராணுவத் தளபதி ஜெரி. டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தற்போது இராணுவத்தைச் சேர்ந்த சுமார் நானூறுக்கு மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் இரண்டாவது ஈழப் போரின் பின்னர் இவ்வாறு இந்தியாவில் பயிற்சியை பெற்று தற்போது சிறிலங்காவுக்கு திரும்பி இருப்பதாகவும் இவர்கள் வடக்கு -கிழக்கிற்கு நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் அதற்கான நடவடிக்கைகளை தற்போது தான் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும் முந்நூறு இராணுவ அதிகாரிகள் மேலதிக பயிற்சிக்காக இவ்வருடம் முடிவதற்கு முன்னர் அனுப்பப்படுவர் என்றும் இதற்கான தெரிவுகள் இராணுவ அதிகாரிகளிடையே ... தாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரை நவீனமயப்படுத்தும் திட்டத்திற்கு அமைவே இம் முயற்சியை தான் மேற்கொள்வதாகவும் நல்ல பயிற்சி பெற்ற அதிகாரிகளே வடக்கு-கிழக்கு முகாம்களுக்கு அவசியம் என்றும் இப் பகுதியில் கடமையை செய்ய விருப்பம் தெரிவித்தவர்கள் மட்டுமே தற்போது மேலதிக பயிற்சிக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது கொள்வனவு செய்யும் நவீன ரக ஆயுதங்களும், இராணுவத் தளபாடங்களும் மற்றும் புதிதாக

(3ஆம் பக்கம் பார்க்க)

# பன்மதவாச்சி தாக்குதலில் ஆயுதங்களும் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை பன்மதவாச்சி விமானப்படை முகாமிற்கும், வேப்பங்குளம் விமானப்படை முகாமிற்கும் இடையில் இரவுக் காவலிற்கு நின்றுவிட்டு பன்மதவாச்சி முகாமிற்குத் திரும்பிய விமானப் படையினர் மீது நேற்று முன்தினம் காலை 7.40மணியளவில் விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

அத் தாக்குதலின்போது இரு விமானப் படையினர் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அப் பகுதி மீது இரு உலங்கு வானூர்திகளும், இரு பொம்மர்களும் பரவலான தாக்குதலை நடத்தின.

இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில்

(3ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு மாவட்டத்தில் 1 லட்சம் குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

1990ஆம் ஆண்டு யூன்மாதம் முதல் இடம்பெற்ற வன்முறைகளினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்து ஆறாயிரத்து எழுபத்தியாறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற 'றேபியா' மாநாட்டில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

தற்போது எண்ணாயிரத்து எழுநூற்றியாறு குடும்பங்கள் தங்கமுகாம்களில் தங்கியுள்ளனர். எழுபத்திரண்டாயிரத்து இருநூற்றித் தொண்ணூறு குடும்பங்கள் எதுவித பாதுகாப்பு மற்ற அவர்களது சொந்தக் கிராமங்களில் சிறிலங்கா அரச அதிகாரிகளினால் பலாத்காரமாக குடியேற்றப்பட்டுள்ளனர்.

தற்சமயம் மட்டக்களப்பு ஏறாவூரில் உள்ள அகதிகள் தங்ககங்களில் 1193 குடும்பங்களும், பெரியபுல்லு மலையில் 615 குடும்பங்களும், கோரப்பர வெளியில் 456 குடும்பங்களும் வாழுகின்றன.

(3ஆம் பக்கம் பார்க்க)

# குருநகர் மீது இரவு எறிகணை வீச்சு; ஒருவர் பலி; நால்வர் காயம்

(குருநகர்)

குருநகர் பகுதியில் நேற்று இரவு மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஒருவர் பலியானார். மற்றும் நால்வர் காயமடைந்தனர்.

நேற்றிரவு 7.25மணியளவில் ஒரு வீட்டின் மீது வீழ்ந்து வெடித்த எறிகணையினாலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டது.

இவ் எறிகணைத் தாக்குதலினால் மவுண்கார்மேல் வீதியைச் சேர்ந்த அன்ரன் மகிமில்லன் (வயது 22) என்பவரே பலியானவராவார்.

அதே இடத்தைச் சேர்ந்த பி. ராணி (வயது 47), எம். தனேந்திரன் (வயது 9), எஸ். செல்வநாயகம் (வயது 63), ஆர். யோகேஸ்வரி (வயது 37) ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(நி.(பா)

# பெரும் தாக்குதல் ஒன்றிற்கு சிறிலங்கா அரசு தயாராகின்றது

## பி. பி. ஸியின் கணிப்பீடு

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளைச் சமாளிப்பதற்காகப் பாதுகாப்புப் படையினர் விமானம் மற்றும் புதிய ஆயுதங்களைப் பெற இருக்கிறார்கள். கோடிக் கணக்கான டொலர் மதிப்பிற்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக அதிகாரிகள் வெளிநாடுகள் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு பி பி ஸி தெரிவித்தது.

பத்தாண்டுகளாக தனிநாடு கோரிப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் தாக்குதல் நடத்த ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இராணுவத்தின் தளபதியாக ஜனவரியில் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டார். நலிந்துவரும் இராணுவத்தின் நிலையை மாற்றி முன்னேற்றமடையச் செய்ய அவர் பாதுகாப்புப் படையை மாற்றி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல்களை குழப்பும் சதியே குண்டுவெடிப்பு

## சுதந்திரக்கட்சி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்ற குண்டு வெடிப்பானது இவ்வாண்டில் நடைபெறவிருக்கும் தேர்தல்களை குழப்புவதற்கான நடவடிக்கை என சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் இக்குண்டு வெடிப்பால் மரணமடைந்த வெடிகுண்டு நபர் [illegible] கூடிய விதத்தில் உயிர்வாழ்வாராயின் உண்மையிலே தாம் மகிழ்ச்சியடைவார் எனவும் இவ் வெடிகுண்டு மக்களுக்கு மரோஒருவர் செய்தியொன்றை அனுப்ப நடத்தப்பட்ட திட்டமிட்ட செயலென்றும் குறிப்பிட்டார்.

இக்குண்டு வெடிப்பு தொடர்பாக மக்கள் மிக தெளிவாக இருக்க வேண்டும் எனவும் இது ஓர் தேர்தல்

(3ஆம் பக்கம் பார்க்க)

# கிணற்றில் சிறுமியின் சடலம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இறந்த நிலையில் சிறுமி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சடலத்தை தமிழீழ காவல் துறையினரே கண்டு பிடித்து யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று நள்ளிரவுவரை சிறுமியின் சடலம் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (பா)(நி)

## இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு;

# ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் உதவி புரிய தயாரென அறிவிப்பு

(லண்டன்)

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு எங்களுடைய ஒத்தாசையை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மிடம் தெரிவித்ததாக இந்து சமய கலாசார அமைச்சர் பி. தேவராஜ் பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

சிறிலங்காப் பாராளுமன்றக் குழுவில் அமைச்சர் பி. தேவராஜ் அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தார். அப்போது அவர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் இதைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் சிறிலங்காவில் பாதுகாக்கப்படவில்லை என்ற ஆதங்கம் ஐரோப்பிய பாராளுமன்றங்களில் தெரிவிக்கப்படுகிறது. அது பற்றி பல கேள்விகள் கேட்டார்கள் சர்ச்சைகளும் நடைபெற்றன இவ்வாறு அமைச்சர் பி. தேவராஜ் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெள்ளி மஞ்சரி வெளிவரவில்லை

இவ்வார வெள்ளிமஞ்சரி இன்று வெளிவரவில்லை என்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

# வரி விளம்பரம்

**கோல்டன் கொமட் குஞ்சு விற்பனை**

கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகாபதி" சந்தையிழக்கு ஒழுங்கைமானிப்பாய் (8000)

**திருத்துனர் தேவை**

மணிக்கூடு திருத்துவதற்கும் T.V திருத்துவதற்கும் ஆட்கள் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வீடியோ எஞ்சினியரிங் கோயில் வீதி நெல்லியடி கரவெட்டி (8026)

**மூலிகைகள்**

மூலிகைகள் நோய் வராது காக்கும், நோய் தீர்க்கும். உணவில் சேர்த்து உண்ணவும் கூடும். குடியிருக்கும் வளவுகளில் நட்டு வளர்க்க ஏற்ற மூலிகைகள் உள்ளன. மில்க்வைற் நீலசோப் மேலுறை 1 சலவைத்தூள் வெற்றுப் பைக்கற் இருபத்தைந்து அல்லது பணம் ரூ: 10/- தந்து கன்று ஒன்று பெறவும். மில்க்வைற் (சி-9124)

**பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு**

லைகன் பிறவுண் ஒரு மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (8001)

**ஆங்கில மருத்துவம்**

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது; பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-9016)

**புத்தாண்டுப் பலன்களும் ராகு கேது மாற்றமும்**

வைவிசேஷ பலன்கள், எல்லா இராசிகளின் பலன்கள், ராகு, கேது மாற்றமும் அடங்கியவை; ரூ 10/- எங்கும் விற்பனையாகின்றது; பாடசாலை உபகரணங்களுக்கு பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (8019)

**பழங்கள் தேவை**

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம்;
TASTELINE INDUSTRIES(PVT) LTD, 14, Seenier Lane, JAFFNA. (இ-9053)

**கடுகை ஆசிரிய மற்றரக்குறை**

உளச்சார்புப் பரீட்சை- மொழி ஆற்றல், தர்க்க ரீதியான சிந்தனை, கணிதத்திறன் திறமைகள், பொது அறிவு- விளையாட்டுத்துறை, சர்வதேச நடவடிக்கைகள், பொருளாதாரம், கல்வி, அரசியல், சமூகபண்பாட்டு பின்னணி - தொடர்பான தகவல்களுக்கு V.A; இலரசா 152B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம் (8003)

## அறுபது கண்டீர் ஆறுமுகமே வாழி

சிரானும் பல்கலையில் கல்வியியல் தலைவனென பேராளும் ஆறுமுகத் தண்ணல்-நேராளும் தூயமூ தறிஞ்ஞ ரறுபதாம் ஆண்டுதனை நேயமுடன் நெஞ்சினிக்க வாழ்த்து!

**முதலாம்வருட பகுதிநேர மாணவர்கள்**

பட்டப்பின் கல்வி டிப்ளோமா

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

(8037)

## மரண அறிவித்தல்

**இந்துமதி நாகலிங்கம்**

கிளிநொச்சி பிரதேச செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமாகிய செல்வி இந்துமதி நாகலிங்கம் 14-4-94 காலமாகிவிட்டார். இறுதிக் கிரியைகள் 16-4-94 மாலை 3 மணிக்கு கண்டிக்குளியில் நடைபெறும்,

தகவல்
க. ஆறுமுகம்
காட்டுக்கந்தோர்ஒழுங்கை
(8038) கண்டிக்குளி.

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 96

## கலை வர்த்தகம் மற்றுமோர் புதிய பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் திரு. வரதராஜன் | அளவையியல் திரு. மனோகரன் |
| கணக்கியல் திரு. சௌந்தி | வர்த்தகம் திரு. நகில் |
| தமிழ் திருமதி மீரா | இந்துநாகரிகம் திரு. பாலா |
| கிறிஸ்தவம் திரு. நிரஞ்சன் | இந்துசமயம் திரு. தாஸ் |
| புவியியல் திரு. சேரன் | அரசியல் திரு. பஞ்சாட்சரம் |

நாடகமும் அரங்கியலும்
திரு. சிவா

ஆரம்பம் 16 04 94 சனி 7.00 மணி

(இ-9191)

※ வேறு பிரிவு ஆரம்பிக்கப்படமாட்டாது.

※ பிரிவு I இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன

## கலை வர்த்தக கல்லூரி C. C. A

வெலிங்டன் சந்திக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு
(கலை, வர்த்தகம்)

ஆரம்பம்;
16-04-94
காலை 8.00மணி

1. எமது வழமையான ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படுகிறது;

2. மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதனால் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்;

நிர்வாகி
(இ-9155)

## A/L 96

**ஆரம்பமாகி விட்டது**

பொருளியல், மகேந்திரன்
கணக்கியல் - சாம்
வர்த்தகம் - தேவா
அளவையியல் - சோதி
தமிழ் - குழந்தை
இந்துநாகரிகம் - அருள்நம்பை
புவியியல் - குணராசா
அரசியல் - கியூபேட்
இந்துசமயம் - அருள்நங்கை
கிரிதரன்
கிறிஸ்தவம் - அருட்சகோதரர்
வரலாறு - இறீதரன்
நாடகமும் அரங்கும் - ஜோசேஸ்

விபரங்கட்கு:
S. அருள்தங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(இ-9120)

## மரண அறிவித்தல்

**சிவஞானரட்ணம் ஜெகனேஸ்வரி (N. S. R.)**

மயிலிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நா சிவஞானரட்ணம் அவர்களின் அன்பு மனைவி ஜெகனேஸ்வரி 09-04 94 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார் இவர் சிவஞானலட்சுமி, சிவஞானசரஸ்வதி, சிவஞானசோதி, சிவஞானதேவி, Dr. சிவஞானசௌரி, Dr. சிவஞானகுமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாஸ் (லண்டன்), சாந்தி ஆகியோரின் மாமியாரும், அர்ச்சுன் அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-04-94 அன்று கொழும்பில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தபாற்கந்தோர் வீதி, இருபாலை — திருமதி சிற்றம்பலம் (N.S.P)

(8033)

## மென்பான விற்பனையாளருக்கு ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்;

1. மாருதி ஸ்ரோஸ், கே. கே. எஸ் றோட், வல்வெட்டித்துறை
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை
3. சாயிகிருஷ்ணா, வதிரிச்சந்தி, நெல்லியடி
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி
5. [illegible]

## நினைவு கூருகின்றோம்...

**1994-04-15**

1985-ம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - அக்கரைப்பற்று 40-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

❋ **யோகராசா** (கோணாவில், அக்கரைப்பற்று - அம்பாறை)

1986-ம் ஆண்டு திருமலை - கும்புறுப்பிட்டிப் பகுதியில் இனங்காணாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

❋ **உதயன்** (ஜோர்ச் யோகனுமார் - சாம்பல்தீவு - திருமலை)

1988-ம் ஆண்டு பூநகரி - முக்கொம்பன் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் நிக்சன்** (வேலாயுதம் பத்திநாதன் - நாவிவிக்குளம், வங்காலை-மன்னார்)

# பனை எமது சொத்து

- எமது இயற்கை வளங்களில் ஒன்று பனை
- தமிழீழ வளத்தின் குறியீட்டுச் சின்னம் பனை
- பல்லாயிரம் பேர்களுக்கு தொழில் வழங்குவது பனை
- பலவித பயன்களை வழங்குவது பனை
- மண்ணரிப்பைத் தடுப்பது பனை
- மழை பெய்விப்பது பனை
- நீண்டகாலம் பயனளிக்கும் சீனிமரம் பனை
- அந்நியச் செலாவணி அளிக்கக்கூடியது பனை
- பல வருடங்கள் பயனளிக்கக்கூடியது பனை.

எனவே

பனையைத் தறியாதீர்.
அனுமதியின்றிப் பனை தறித்தால்
தறிக்கப்பட்ட ஒவ்வொரு பனைக்கும்

**1000 ரூபா வீதம்**

அபராதம் விதிக்கப்படும்.

அனுமதியின்றிப் பனை தறிப்போர் பற்றிய விபரத்தை அண்மையில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டத் தொடர்பாளர் செயலகத்தில் அல்லது அரசியல்துறை வட்டப் பொறுப்பாளர் செயலகத்தில், அல்லது காவல்துறையினரிடம் தெரியப்படுத்துங்கள்.


பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

(இ-9001) தமிழீழ விடுதலைப் புலிகள்.



4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி
5. அறிவகம், சாவகச்சேரி
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டி வீதி, பளை



**TASTE LINE INDUSTRIES**
(PVT) LTD,
14, Seenier Lane Jaffna.
(இ-9043)



ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக

"ராசி சில்க்ஸ்"

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும் உதைபந்தாட்டம்

# 2-வது அரை இறுதி ஆட்டம் - 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 15 - 04 - 94
நேரம்:- இரவு 7. 15 மணி

சிறப்பு விருந்தினர்: வே. பாலகுமாரன்
பங்குபற்றும் அணிகள்:
1. டைமன் விளையாட்டுக் கழகம் எதிர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்

பிரவேசம் ரூபா 25-00
சிறுவர்களுக்கு மட்டும் 10.00

★ பந்து விளையாட்டை ரசிப்பதுடன் சிற்றரும்பிய சிறார்களுக்கும் உதவுங்கள்
(இ-9041)


கப்டன் நிக்சன் (... - ... விவிக்குளம், அங்காலை-மன்னார்)
இதே சுற்றிவளைப்பில் சகதோழராகச் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

2-ம் லெப். சங்கர் (செல்லையா தயாபரன்-சாமிப் புலம், நல்லூர், பூநகரி - மன்னார்)
கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரசாவெய்திய,

றெஜி (பாஸ்கரன் அசோக்குமார் - 10-ம் மடிவம், தர்மபுரம் - கிளிநொச்சி)
1989-ம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதபுரம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

குரு | சயனம் (தர்மரட்ணம் தவேந்திரன் - விநாவன வீதி, தம்பிலுவில்- 02 - அம்பாறை)

எல். பி. (சுந்தக்குட்டி சுந்தரராஜன் - விநாயகபுரம், திருக்கோயில் - அம்பாறை)

வரதன் (இராஜவேல் சிவானந்தமூர்த்தி - மகாவித்தியாலயவீதி, தம்பிலுவில்-02- அம்பாறை)
மணலாற்றில் சிறிலங்காப் படையினர் மீது பதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

2-ம் லெப். குணம் (கணேசலிங்கம் ஜெகநாதன் - கிண்ணியா - திருமலை)

2-ம் லெப். கரன் (வேலாயுதம் சசிகரன் - சாம்பல் தீவு - திருமலை
யாழ். ஒட்டுமடம் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆதரவாளர்,

ஜீவா (தம்பிராசா பிரபாகரன் - நாவலடி அரியாலை - யாழ்)
யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் - அரசடியைச் சேர்ந்த தமிழிளைஞன்,
1991-ம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

ஸ்ரீபன் (தம்பையா உமாசிவம் - நெற்புலவு, பூநகரி - மன்னார்)
1993-ம் ஆண்டு வலிகாமம் மேற்குப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத்தாக்குதலாலும் எறிகணைத் தாக்குதலாலும் பலியான ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்புப் பகுதிகளைச் சேர்ந்த இருவர், சுன்னாகம் கிராமம் பற்றுவாசி ஒருவர் உட்பட 03 பொதுமக்கள்

❋ இக் குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி-9151)

சிந்தனைக்கு

வீரசுதந்திரம் வேண்டிநின்றார், பின்னர்
வேறொன்று கொள்வரோ?
- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2028
தபால் பெட்டி எண் 05

# கல்லும் ஆயுதமாகும்

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று, இரு சிறுவர்களை இராணுவ சீருடையணிந்த ஆயுதம் தாங்கிய இருவர் கைகளில் பிடித்துக்கொண்டு செல்லும் படம் ஒன்றை பிரசுரித்திருந்தது அப்படத்தின் அடிக் குறிப்பாக "இரு 11 வயது பலஸ்தீனச் சிறுவர்களை கல்லெறிந்த காரணத்திற்காக இஸ்ரேல் பொலிசார் கைது செய்து அழைத்துச் செல்லும்போது பிடிக்கப்பட்ட படம்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது;

ஆனால், இப் படமானது, தனியாக இரு பலஸ்தீனிய சிறுவர்களை பொலிசார் கைது செய்து கொண்டு செல்வதை மட்டும் காட்டுபவையல்ல. பலஸ்தீனப் போராட்டம் இன்னமும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது, எதிர் காலத்திலும் உயிர்வாழும் என்பதை உலகிற்குப் பறைசாற்றும் ஒன்றாகவே கொள்ளமுடியும்.

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில், இன்று ஈடுபட்டுவரும் இளைஞர்கள் போராடும் இரண்டாவது தலைமுறையினராகும். பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் முதலாவது தலை முறையைச் சேர்ந்தவராகும்; போராட்டத்தைத் தொடங்கிய தலைமுறையினர் போராட்டத்தில் சற்றுக் களைத்துப்போய் விட்டாலும், இளைஞர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை. போராடியே தீரவேண்டும் என்பதில் குறியாகவே உள்ளனர். இவர்கள் யூதர்களின் ஆக்கிரமிப்பின் கீழ்தங்கள்வாழ்வை அமைத்துக்கொள்ளவிரும்பவில்லை.

இதேவேளை, அடுத்த மூன்றாவது தலைமுறையாக சிறுவர்களும் போராடத் தயாராகிவிட்டதையே மேலே குறிப்பிட்ட படம் விபரித்து நிற்கின்றது; அதாவது தலைமுறைகள் பல கடந்தாலும் தேசிய இனங்கள் தமது மண்ணிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடியே தீருவார்கள் என்பதே இதன் பொருளாகும்;

இஸ்ரேலிய அரசு கெரில்லா எதிர்ப்பு போராட்டத்தில் பிரசித்தமானது. பல கெரில்லா நடவடிக்கைகளை அது வெற்றிகரமாக முறியடித்ததும் உண்மைதான். அத்தோடு, நவீனமயப்படுத்தப்பட்ட இராணுவத்தையும் கொண்டது; ஆயினும், பலஸ்தீன மக்களின் போராட்டத்தை அவர்களால் நசுக்கிவிடவோ அன்றி வெற்றி

# பாகிஸ்தான் உளவுத் துறையுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு

(சென்னை)

தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் உட்பட நாட்டில் செயற்படும் மற்றும் தீவிரவாத அமைப்புக்களுக்கும் பாகிஸ்தானின் உளவுத் துறைக்குமிடையில் தொடர்பிருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறினார்.

மூன்று நாள் பயணம் மேற்கொண்டு தமிழ்நாடுவந்திருக்கும் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசும் போது இவ்வாறு கூறினார்.

அடுத்த மாதம் முடிவடையும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க சட்டப்பேரவையில் தனியான தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் அண்மைக்காலங்களில் அதிகரித்துவரும் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை பற்றிக் கூறிய அமைச்சர் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியது மாநில அரசின் முழுப் பொறுப்பாகும் என்றார். அவ்வாறு சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதா என்பது பற்றித் தான் இப்போது கருத்துக்கூற முடியாது என்றார்.

காவல் துறையை நவீனப்படுத்த மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாட்டுக்குத்தான் அதிக நிதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில்கொலைகொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கும் மத்திய அரசுக்கும் முதலமைச்சர் குற்றச்சாட்டுக் கூறியது பற்றி அவர் கருத்து வெளியிடுகையில், முதலமைச்சர் அவ்வாறு கூறியிருந்தால், அந்தப் பதவியில் இருக்கும் ஒருவருக்கு அது ஏற்புடையதல்ல என்றார்,

தான் தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் சமயம் முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர்களும் தம்மைத் தாராளமாகச் சந்தித்துப் பேசலாம் என்று கூறினார்; ஒவ்வொரு மாநிலத்திலும் உள்துறை அமைச்சரை முதலமைச்சர் சென்றுசந்திப்பதாகவும்தமிழ்நாடு மட்டும் இதற்கு விதி

சவான்

விலக்கு என்றும் சுட்டிக் காட்டினார்;

முதலமைச்சர் தமிழ் நாடு ஆளுநரைத் தனிநபராகக் கருதாமல் அரசியல் சாசனப் பதவிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி செய்த புகார் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுதிக் கொடுத்த மகஜர் சம்பந்தமாக மத்திய அரசு ஆராய்ந்து ஒருமுடிவு எடுக்கும் என்றார்;

## தென்மாகாண ஆளுநருக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

காலி டிக்சன் வீதியில் உள்ள தென் மாகாண ஆளுநர்ஜெயரட்ணவின் வீட்டிற்கு கடும் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது;

காலி மாவட்ட அரச ஊழியர்களுக்கும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் புதுவருடத்தை முன்னிட்டு பயங்கரவாத பாதிப்பு நட்ட ஈடு முற்பணம் வழங்க வேண்டுமென மாகாண அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றிய போதும் ஆளுநரின் அனுமதி கிடைக்கவில்லை இதைத் தொடர்ந்து தற்போது காலியில் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளன.

இதனையடுத்தே ஆளுநருக்கான பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## அம்புலன்ஸ் வண்டி தனிப்பட்ட பாவனையில்

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழத்தில் வைத்திய சாலை அம்புலன்ஸ் வண்டிகள் அங்குள்ள மருத்துவர்களால் சொந்தத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நோயாளர் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது;

அம்புலன்ஸ் வண்டியின்மையால் நோயாளரை அவசர சிகிச்சைக்காக வேறு மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது; அதேவேளை அங்குள்ள மருத்துவ மனைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விலை நிர்ணயம்

பனை வெல்லத்தின் சில்லறை விலை கிலோ ஒன்றிற்கு ஐம்பது ரூபாவாகவும், மொத்தவிலை 47 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது- இந் நிறுவனத்தின் பனை தென்னைவள அபிவிருத்திகூட்டுறவு சங்கங்கள் மற்றும் பனை அபிவிருத்தி சபை ஆகியவற்றின் விற்பனை நிலையங்களில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்திசபை புத்தக பதிவாளர் மற்றும் காசாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட ரீதியில் நடாத்தவுள்ள போட்டிப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது

இப் பரீட்சை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது (இ) (ச)

## பொதுமக்கள் வீடுகள் இராணுவத்தின் வசம்

(மன்னார்)

மன்னார்த்தீவில் உள்ள பேசாலையில் முப்பத்தி நான்கு வீடுகளையும் வங்காலையில் ஐம்பது வீடுகளையும் சிறிலங்கா படையினர் தம் வசம் கைப்பற்றி தங்குமிடங்களாக மாற்றியுள்ளனர்;

இதனால் இவ் வீடுகளில் வாழ்வோர் எதுவித வசதிகளுமற்ற தங்ககங்களில் வாழ்கின்றனர்.

சிறிலங்கா கடலெல்லைச் தடைச் சட்டத்தினால் மன்னார்த் தீவில் முந்நூறு குடும்பங்களைச் சேர்ந்த 3500பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ வசம் சிக்கி நிர்வாகத்தின் கீழ் உள்ள மன்னார்த் தீவில் ஏனைய இடங்களை விட பொருள்களின்

பெரும்

அமைக்க முயன்று வருகிறார் என்று பி, பி ஸி, தெரிவிக்கி

## தேர்தல்களை நடாத்த திணைக்களம் தயாராகிறது

அதிகாரி தகவல்

இவ்வாண்டு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் தேர்தல் ஆணையாளர் ஈடுபட்டு வருவதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பான வேலைகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டு வருவதாகவும் வாக்குச் சீட்டு அச்சிடுவது தொடர்பாக அரசாங்க அச்சக அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் கடமைக்குத் தேவைப்படும் உத்தியோகத்தர்கள், வாகன வசதிகள், வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களின்எண்ணிக்கைபோன்றவற்றின் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அதிகாரி கூறினார்;

## கூட்டுறவு அமைச்சர் முகாம்களுக்கு விஜயம்

(கொழும்பு)

கூட்டுறவு ஜனசக்தி அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி இரு தினங்களுக்குமுன் பலாலி, பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்தார்;

புத்தாண்டு வாழ்த்து தெரிவிக்கவும் படையினரின் நடவடிக்கைகளுக்கு நன்றி கூறவும் அமைச்சர் இவ்விஜயத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. அமைச்சருடன் இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவும் சென்றிருந்தார்.

## நில அளவை தொழிலாளர் 'மனம்சஹாயக' ஆகினர்

(கொழும்பு)

நில அளவை உதவியாளர்களின் உத்தியோகப் பதவிப் பெயர் மனம் சஹாயக' என சிங்கள மொழிப்பெயரிலேயே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் குறிப்பிடப்படவேண்டும் என நில அளவை நாயகத்தின் சுற்று நிருபத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை நில அளவைத் தொழிலாளர் சேவை 'மனம் சஹாயக'' சேவை என மாற்றப்பட்டுள்ளது. இதன்படி நில அளவை தொழிலாளி என்ற சொல்லை ''மனம் சஹாயக'' என மும்மொழிகளிலும் பாவிக்க வேண்டுமென வும் எந்தக் காரணம் கொண்டும் இதற்கு மாறாக வேறு பெயர் எதுவும் எந்த மொழியிலும் பாவிக்கக் கூடாது எனவும் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது;

## 87 ஆவது ஆண்டு நினைவு விழா

(வடமராட்சி)

மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை பெருமகனாரின் 87ஆவது ஆண்டு நினைவுவிழா நாளை பிற்பகல் 6.00 மணிக்கு சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் திரு. க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது

இவ் விழாவின் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு. ஆ. சிவசுவாமி அவர்கள் கலந்துகொள்கின்றார். மற்றும் சிறப்பு விருந்தினர்களுடன் சிறப்பு சொற்பொழிவுகளும் சிறப்பு நிகழ்வுகளும் மற்றும் சிறுவர் சிறுமியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (வே)

## கருத்தரங்கு

வடமராட்சி க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன்கருதி கல்வி வள

தோடு, நவீனமயப்படுத்தப்பட்ட இராணுவத்தையும் கொண்டது; ஆயினும், பலஸ்தீன மக்களின் போராட்டத்தை அவர்களால் நசுக்கிவிடவோ அன்றி வெற்றி கொள்ளவோ முடியவில்லை; அதாவது ஒரு சில நடவடிக்கைகளை, முறியடிப்பதினால் ஒரு விடுதலைப் போராட்டம் அழிந்துவிடப்போவதில்லை,

ஏனெனில் பலஸ்தீனியரின் விடுதலைப் போராட்டம் என்பது தனியாக ஆயுதத்துடனும்,உடலுடனும் மட்டும் தொடர்புபட்டதல்ல; அது பலஸ்தீனியர்களின் ஆத்மாவுடனும், உணர்வுடனும் தொடர்புடையது அதன் அழிவென்பது அவ்வினத்தின் பூரணமான அழிவுடன் முடியுமே ஒழிய ஒருபோதும் அவ் இனம் உயிர்வாழும்வரை சாத்தியமாகப் போவதில்லை.

இந் நிலையில் ஒரு தலைமுறை தோல்வி கண்டதால் அடுத்த தலைமுறை போராடாமல் விடப்போவதோ, அன்றி ஒரு தலைமுறையால் இயலாமல்போனதை அடுத்த தலைமுறை கைவிட்டுவிடப்போவதோ இல்லை. இதேசமயம் தமது சுதந்திரம் கிட்டும்வரை போராடியே தீரும்; இப் போராட்டத்தில் பல தலைமுறையினர் பங்கு கொள்ளும் நிலையும் உருவாகும். அப்பொழுது வயதென்ன? பால் வேறுபாடு என்ன? எதுவுமே தடையாக இருக்கமாட்டாது அதேபோன்று எதிரியை எதிர்க்கும் உணர்வுள்ளவர்களுக்கு கல்லும் ஆயுதமாகும். இதுவே இன்று பலஸ்தீனிய சிறுவர்களின் கைது வெளிப்படுத்தும் கதையாகும்;

ஆனால், இது தனியாகப் பலஸ்தீனச் சிறுவர்களுக்கு மட்டுமானதல்ல உலகத்தில் உள்ள ஒடுக்கப்படும் தேசிய இனங்களைச் சேர்ந்த சகல சிறுவர்களுக்குமே பொருத்தமானதாகும்; இந்த வகையில், தமிழ் சிறுவர்களுக்கும் இது பொருத்தப்பாடானதே ஆகும்; இதன் வெளிப்பாடாகவே இன்றைய தமிழ் சிறார்களும் ஆயுதம் ஏந்தி நிற்கின்றார்கள்;

ஆனால், இதனை பேரினவாதிகள் உணர்வதில்லை, ஆயுதத்தாலும், படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதன்மூலமும் பிரச்சினைகளை இல்லாதுஒழிக்கலாம் என்றே அவர்கள் கருதுகின்றார்கள். வரலாற்றையும், உலக நடப்புக்களையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. தமக்கென ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளவே விரும்புகின்றனர். அவற்றில் தோல்வி ஏற்பட்டாலும், அடுத்த சந்தர்ப்பத்தை உருவாக்கவே முற்படுகின்றார்கள்; வெல்லமுடியாது என்றபின்பும், தோல்வியை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. ஆனால், இறுதியில் அவர்கள் விரும்பியோ, விருப்பமின்றியோ தோல்விகளை ஏற்றுத்தான் ஆகவேண்டி வரும் என்பதில் எவருக்கும் சந்தேகமே தேவையில்லை;

மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி) (ச)

## கலந்துரையாடல்

இன்று நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் வலயம் 1 இனைச் சேர்ந்த கரப்பந்து நடுவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறுமென உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-04-15 - வெள்ளி-இரவு

08:01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'புரட்சிப்புயல் பூபதித்தாய்'

08 10ற்கு - கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் சிறுகதை ''விடியலின் பாதையில்'' அடுத்து கவிதை - 'உணர்ந்தான்'

08 30ற்கு - செய்திகள்

08.40ற்கு-அரசியல் அரங்கம் 'யாரோ விதைத்த வினையை அறுவடை செய்யும் ஆப்கான் மக்கள்'

08 50ற்கு வாத்திய கானங்கள்

1994 04 16 சனி - காலை

07.02ற்கு - மாவீர வணக்கம்

07.15ற்கு அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'அணையாத தீபம்' - நாடகம்

07.25ற்கு-நீங்கள் கேட்டவை

07.45ற்கு - செய்திகள்

07.50ற்கு - பத்திரிகைச் செய்திகள்

07.55ற்கு - தாயகப் பாடல் என்பன இடம்பெறும்;

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தொண்டமானுக்கு

திகதி சேவைக விளக்கம் தருவதற்கு தான் விரும்புவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு தொண்டமானின் ஒத்துழைப்பு தேவையில்லையென்றும் அது அண்மையில் நடைபெற்ற தென்மாகாண சபை தேர்தலில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர் ஐ.தே.க. சிறுபான்மை நலன் மற்றும் உரிமை தொடர்பாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை ஐ.தே.க. நிறைவேற்றினால் தமிழர் வாக்குகள் பெறுவதற்கு அது போதுமானது என தெரிவித்துள்ளார்;

## தேர்தல்களை

ஆண்டு என்பதை சிந்திக்குமாறுதான் மக்களுக்குவேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவேண்டுமாயின் ஐந்து நட்சத்திர ஹொட்டல்கள் தேவையென்றால் உல்லாசப் பயணிகளை விரட்டத் தேவையில்லை என்றும் கொழும்பில் பல இடங்களில் வெறுமையான அறைகள் இருப்பதாகவும் இதில் பேச்சுவார்த்தை நடத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

## மன்மதுவாசி

சேதம் எதுவும் இல்லை இத்தாக்குதலின்போது;
- ரி 81 ரக துப்பாக்கி -1
- ரவைக்கூடுகள் -08
- நடுத்தர ரவைகள் -198
- மழை அங்கி -01
- கோல்சர் -01

என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன;

## பெரும்

அமைக்க முயன்று வருகிறார் என்று பி.பி.ஸி. தெரிவிக்கிறது;

வடக்கிலுள்ள போராளிகளைவிடப் பன்னிரெண்டு மடங்கு பெரியதான படைக்கு அதிக ஆயுதங்களும், வீரர்களும் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது;

அரசின் வருடாந்த இராணுவச் செலவு 400 மில்லியன் டாலர் ரஷியாவிடமிருந்து நவீன ஹெலிகள், தென் ஆபிரிக்காவிலிருந்து கவசவாகனங்கள், சீனாவிடமிருந்து பீரங்கிப் படகுகள் ஆகியவை பெறப் பெற முயற்சிக்கிறார்கள். இதற்காக இராணுவ அதிகாரிகள் வெளிநாடு சென்றுள்ளார்கள்;

தென்பகுதியில் இராணுவத்திற்கு ஆள் சேர்க்கவும் பெரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேலையில்லாத இளைஞர் இராணுவத்தில் சேர முன்வருகிறார்கள்; நல்ல சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் போர் முனையில் ஏற்பட்ட இழப்புக்களால் அரசு திட்டமிட்ட இலக்கை அடைவது கடினமாகிவிட்டது; அதில் ஆட்களைச் சேர்ப்பதற்காகக் கல்வித் தகைமை, உடற்திறமை ஆகியவை குறைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே ஒரு லட்சம் பேர் உள்ள படையில் மேலும் பத்தாயிரம் பேரைச் சேர்க்க விரும்புகிறார்கள். இன்னும் அதிகப்படை அதிக ஆயுதம் என்றால் யாழ்ப்பாணத்தின் மீது மேலும் அதிகமான தாக்குதல் என்று பொருள்;

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பலாத்காரம் தான் வழி என்பதில் ஜனாதிபதி எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதை இராணுவ செலவு அதிகரித்துள்ளது காட்டுகிறது

-இவ்வாறு பி பி ஸி செய்தியாளர் [illegible] செய்திக்குறிப்பில் தெரிவிக்கிறார்.

இராணுவ வசம் சிங்கள நிர்வாகத்தின் கீழ் உள்ள மன்னார்த் தீவில் ஏனைய இடங்களைவிட பொருட்களின் விலை அதிகமாகும்

## சமாதான

தம் அடைந்துள்ளதாகவும் தாம் சமாதானம் குறித்து தொடர்ந்து முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் இதன் நன்மை குறித்து வேறு வழிகளில் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிய வருகின்றது.

இதேவேளை மேற்படி துறைசார் வல்லுநர் குழுவின் ஒரு சில அங்கத்தினர் தென்மாகாண சபை முதல் அமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை சந்தித்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டவர் எனினும் இதன் முடிவுகள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை

தற்போது யாழ். விஜயம் மேற்கொள்ள இருந்தவேளை ஜனாதிபதியின் நேரடியான தலையீட்டினால் தமது யாழ் விஜயத்தை ஒத்திப்போட்ட சிறிலங்கா சபாநாயகர் எம். எச். முகமட்டுடன் சந்திப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது

இதேவேளை யுத்தம் தொடர்ந்து நடைபெறுமானால் அது பாரிய அழிவையே நாட்டிற்கு ஏற்படுத்தும் என்றும் நவீன ஆயுதங்களோ அன்றி படை அதிகரிப்போ பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வை தரமாட்டாது என அமைப்பு அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்; (தி)

## இந்தியாவில்

தெரிவுசெய்யப்படும் இராணுவத்தினரையும் இனி இடம்பெறப்போகும் யுத்தத்தில் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்;

## கருத்தரங்கு

வடமராட்சி க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன்கருதி கல்வி வளர்ச்சிக் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை ஹாட்லிக் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது

மாணவர்களின் பெறுபேற்றுத்திறன் அதிகரிப்புத்திட்டத்தின் அடிப்படையில் இக்கருத்தரங்கு நடைபெறும் இக் கருத்தரங்கின் போது பெற்றோர்கள், பாதுகாவலர்கள், கல்விமான்கள் கலந்து கொண்டு இக் கல்வி வளர்ச்சித் திட்டத்திற்கு உதவுமாறு கல்வி ஆய்வுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது கல்வி ஆய்வுக் குழு இக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. (வே)

## படையினரிடம் அகப்பட்டார்?

அளவெட்டி வடக்கில் வீடு பார்க்க சென்றவர் கடந்த ஐந்து நாட்களாக வீடு திரும்பவில்லை இவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி வடக்கில் உள்ள தனது வீட்டை பார்க்கச் சென்ற கந்தையா நாகமணி (வயது 53) என்பவரே காணாமல் போயுள்ளவராவார்;

இதேவேளை சம்பவதினம் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரியவருகின்றது; (பி, ச)

## ...ட்டு

மட்டக்களப்பில் ஏற்பட்ட வன்செயல்களின்போது 90 விழுக்காடான மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர்; இதில் 65 வீதமானவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை மட்டக்களப்பை முழுமையாக புனரமைக்க 24 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

# மணிவிழா சிறப்பிதழ்

## பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் தலைவர் கல்வியியற்துறை யாழ். பல்கலைக்கழகம்

### வாழ்த்துகிறார்கள்

பேராசிரியர், கல்விமான் திரு.வ. ஆறுமுகம் அவர்களுக்கு மணிவிழா எடுக்கவிருப்பதறிந்து பேருவகை எய்துகின்றோம். அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வித்துறைத் தலைவராகத் திறம்படப் பணியாற்றிவருவதை யாம்நன்கு அறிவோம் எண்ணும் எழுத்தும் எம்மிருகண்கள் போன்றவை. அவற்றை மாணாக்கருக்குப் புகட்டும் குரு தெய்வத்துக்குச் சமானமாகிறார். தகுதி வாய்ந்தஒரு பெரியாரை அவர் வாழ்நாளிலேயே மகிழ்வுறச் செய்வது சிறப்பானதும், யுக்தி பூர்வமானதுமாகும். அப்போது, அது கண்டு நாமும் பெரும் மனநிறைவு அடைகின்றோம். திரு. ஆறுமுகனார் நிறைவான இறைபக்தியுடையவர் கண்ணியம், கடமை உணர்ச்சி, நேர்மை, ஆடம்பரமிலா வாழ்க்கை ஆகிய அதிஉயர் பண்புகளைக் கடைப்பிடித்தொழுகுபவர். எவரையும்இன்முகம் காட்டி உபசரிக்கும் பெருங்குணமும், அவரின் இனிமையான பேச்சும் யாவர் உள்ளங்களையும் கவரவல்லன. இவர் போன்றோர் ஆயிரத்தில் ஒருவரே-

இன்னும் அவர் வயதுக்கான விழாக்களைக் கண்டு, சகல செளபாக்கியங்களையும் பெற்று நலமே நீடு வாழவேண்டுமென இறைவன் திருவருளை உளமார வேண்டி, அவரை மனமார ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஆதீன முதல்வர் ஆசியுரை

---

பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு அவரைக் கெளரவிக்குமுகமாக யாழ். பல்கலைக்கழகக் கல்விக்கழகம் சிறப்பு மலரொன்றை வெளியிடுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் ஆறுமுகம் கல்வித்துறையில் சிறப்புத் தகைமையும் நீண்ட அனுபவமும் பெற்றவர். முதலில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பின்பு கொழும்பு பல்கலைக்கழகத்திலும் ஈற்றில் எமது பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி சிறந்த கல்விமான்களை உருவாக்கியவர். தமது மாணவ குழாத்தின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். எமது கல்வித்துறையின் வளர்ச்சிக்கு ஆரம்பத்திலிருந்தே அவர் முக்கிய பங்கு ஆற்றியுள்ளார். அவரின் மணிவிழாவையொட்டி அவருக்குப் பாராட்டும் ஆசியும் கூறுவதுடன் அவரின் பணி மேலும் சிறப்புறத் தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் க.குணரத்தினம்
பதில் துணை வேந்தர்.

---


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கல்வியியற் துறைத் தலைவரான பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களின் மணிவிழா மலர் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் கல்வியியற்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்த அவர் யாழ்ப்பாண மக்களுககு பணிபுரியும் பெரு விருப்புடன் 1980-ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்று இங்கு சேவையாற்றி வருகிறார்.

கல்வித்துறையில் சிறந்த பணியாற்றிய அவரை தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசால் வழங்கப்பட்ட இல்வசக்கல்வியின் தந்தையான முன்னாள் கல்வி அமைச்சர் சி டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா ஞாபகார்த்த பரிசிலைப் பெற்ற பெருமைக்குரிய பேராசிரியர் அவர்கள் நீடூழி வாழ்ந்து தமிழ் மண்ணுக்கும், மக்களுக்கும், சேவையாற்றி நூற்றாண்டு விழா காண வேண்டுமென்பதே எமது பெரு விருப்பமாகும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப் பீடாதிபதி,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

---

தன்னிலை தாழாமை தாழ்ந்த பின் வாழாமை இந்த வார்த்தைகள் வான்புகழ் வள்ளுவன் கூறியவை தலைமைத்துவப் பண்பிற்கு அடக்கம், அறிவு, அன்பு, நேர்மை, இதயசுத்தி என்பன ஆழமாக வேரூன்றியிருக்க வேண்டும். நெல்லும் உயிரன்று. நீரும் உயிரன்று எனக் கருத்தாழமாகக் கூறிய வார்த்தைக்கு உரமூட்ட ஒரு பெருமகனைத் தமிழ் மண்ணில் தேட வேண்டுமானால் அது சுலபம். பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, கட்டுப்பாடு, திருடாமை, தூய்மை, புலன்களின் மேல் ஆதிக்கம், திறமை, அறிவு, உண்மை,



தமிழீழம் தலை நிமிர்ந்து வாழ்ந்திட அதனகத்துத் தோன்றிய சான்றோர் முன்னணியில் தனிப் பெருஞ் சிறப்புப் பெற்றவர்கள் மிகச் சிலர். அவ்வரிசையில் இன்று மணிவிழாக் காண்கின்ற பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் உயர்ந்தோர் உள்ளங்களைக் கவர்ந்த உத்தமர். பன்னரும் சிறப்புடைய துன்னாலையூரில் வாழ்ந்த இவரது தந்தை திரு ஆறுமுகம் வல்லிபுரம் அவர்களின் புகழை நிலமிசை நிறுவிய வகையால் இவர் ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் லென்னும் சொல்'' என வள்ளுவர் வழுத்திய வாய் மொழிக்கு இலக்கியமாயமைந்தவர்.

கரவெட்டி ஞானசாரியர் கல்லூரியும் அவ்வூர் திரு இருதயக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இவரை உருவாக்கி. இவரால் தங்கள் புகழை வளர்த்தவை எனலாம். இந் நெறியில் வளர்ந்த பேராசிரியர், பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ் விசேட கலைமாணி யாக 1956 ஆம் ஆண்டு தொடக்கம் புகழ் பூத்து விளங்கினார்மேற்படி பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வித் தகைமை நெறியிலும், லண்டன் பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வி அக்கடமி டிப்புளோமா நெறியிலும் மேற்படி கழகத்தின் முது தத்துவ மாணி (கல்வி) யிலும் பட்டங்கள் பெற்று கலாவிற்பன்னராக விளங்கினார். தமிழீழத்தில் தோன்றிய கலா மேதைகளில் பேராசிரியர் ஆறுமுகம் அவர்களின் தோற்றம் கல்வியுலகின் பெருமகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் உண்டாக்கியது.

இத் திருமகனார் கல்வித் துறையில் ஆற்றிய சேவைகள் அளவிடற்கரியவை. படித்து முடித்து வெளிவந்த பின்னர் பன்னீராண்டு காலம் ரத்மலானை இந்துக் கல்லூரியிலும் மருதானை சஹிராக் கல்லூரியிலும் கோட்டமுனை மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராக இருந்து ஆற்றிய சேவையால் அனேகர் ஆர்வம் மிக்க கல்விமான்களாயினர். அறிவுக் கடலாகவும் ஆற்றல் முது நிலையாளராகவும் விளங்கிய பேராசிரியர் அவர்கள் அதன் பின் பேராதனை பல்கலைக் கழக உதவி விரிவுரையாளராகவும் கொழும்புப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராக, கல்வியியற்துறைத் தலைவராக கல்வியியற் துறைப் பேராசிரியராக உயர்கலை கற்போரின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். இந் நிலையில் மணிவிழாக் காணும் விழா நாயகர் உயர் திரு ஆறுமுகம் அவர்கள் இந்நாட்டில் ஈடிணையற்ற பேரறிஞர். 1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற கன்னங்கரா நூற்றாண்டு விழா வைபவத்தின் போது சிறந்த கல்வியாளருக்கு வழங்கப்பட்டு வரும் கன்னங்கரா விருது பேராசிரியர் உயர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு

### வாழ்த்துகிறார்கள்

பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் தமது அறுபது அகவைப் பூர்த்தி செய்து மணிவிழாக் கொண்டாடுகின்றாரென்பதறிந்து பேருவகையடைகின்றேன்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் முகவராண்மை அஞ்சல்வழிப் பட்டப்பின் கல்வித்தகைமைச் சான்றிதழ் பாடநெறியினை நடத்திய காலம் தொடக்கம் இப்பெருந்தகையை யான் அறிவேன்.

அன்னார் எம் மக்களின் உயர்கல்வியை வளர்க்க வேண்டுமென்னும் பேரவாவுடையவர். நமது ஆசிரியர்கள் அனைவரும் கல்வித்துறையில் முதுமாணிப்பட்டத்தை அல்லது பட்டப்பின் கல்வித்தகைமைச் சான்றிதழைப் பெற்றுச் சிறந்தகல்விமான்களாகமிளிரவேண்டுமென்னும் சிந்தனையுடையவர். எத்தனையோ அவலங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியிலும் எமது ஆசிரியர்களுக்கு ஓர் உந்துசக்தியாக விளங்கினார் அதற்காக எமது கல்வி உலகம் - ஆசிரியர் உலகம் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

கல்விப்புல வளர்ச்சிக்குப் பேராசான் அவர்கள் ஆற்றிவரும் தன்னலமற்ற அரும்பணி எம்மனைவராலும் பாராட்டப்பட வேண்டியதே கற்றோரைக் கெளரவிப்பது எமது மரபு. அந்த வகையில் பேராசிரியர் அவர்களுக்கு எடுக்கும் மணிவிழா சாலப் பொருத்தமானதாகும்.

பேராசிரியர் அவர்கள் ஓர் எளிமையும் இனிமையும் மிக்க உன்னத மனிதர்; நல்லாசான்; பண்பாளர்.

பேராசான் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழவேண்டும்; அவரின் சீரிய கல்விப்பணி தங்குதடையின்றித் தொடரவேண்டும்; அவரால் எமது ஆசிரிய சமுதாயம் மேலும் பயனடைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

செல்வி தி. பெரியதம்பி
கல்விப்பணிப்பளர் யாழ்ப்பாணம் பிரதேசம் வலயம்-1

---

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனுமின்றி' என்னும் வார்த்தைகள் பாரதி சொன்னவை. 'வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்' என்ற கம்பன் வார்த்தைகளும் பேராசிரியர் வ. ஆறுமுகத்தைச் சிந்திக்கும் போது சிந்தையை மகிழ்விப்பவை தலைமைத்துவமான மாணவ பரம்பரையை நெறிப்படுத்துபவர்கள் அப்பழுக்கற்ற அகத்தினராய், ஆற்றலின் திருவிடமாய் அமைந்துவிட வேண்டும். சான்றோர் பலர் நான் வாழுமூர் என்று மார்பு தட்டிப் பெருமிதம் கொண்ட பிசிராந்தையர்போல் இன்னும் எம் மண்ணில் பல்லாயிரக்கணக்கான சான்றோர்கள் ஏன் உருவாகக்கூடாது? அத்தகையதொரு தெய்வத் திருப்பணியை இதய சுத்தியுடன் செய்பவர் திரு. ஆறுமுகமாகும். இவர்தம் வழிநடத்தலில் கல்வியியற்துறையில் ஆசிரிய மாணவர்கள், பல்கலைக்கழகம் புகுந்த இளசுகள் செழித்து வளர்வதைக் காணலாம்.

பேராசிரியருக்கு அறுபது அகவை என்னும் போது. அவர்தம்' பணிபண்பட்டு மேலும் இந்த மண்ணுக்குத் தேவை' என்ற எண்ணம் எமக்குள் முகைவிடுகின்றது. பழக இனிய, சாதாரணமான மனிதனாக பேராசிரியரைபல்வேறு நிகழ்வுகளிற் பார்த்திருக்கின்றேன். தேனூறு கிளவிக்கு வாயூறிநின்ற முருகன்போல் கல்வியியற்துறையிற் பயிலவரும் மாணவர்கள் பேராசிரியரின் பெருந்தன்மையிலும் பேராற்றலிலும் திளைத்து முனைப்பொடுமேலோங்கும் சிறப்பினைச் சொல்ல சொற்களில்லை. எண்ணிய முடிதல், நல்லவே எண்ணல், திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு என்பன பேராசிரியரின் ஒட்டுமொத்தத் தோற்றமெனலாம்.

நீவீர் நீடு நிலைபெற வாழ்த்தியமைகின்றேன்

கோ. சி. வேலாயுதம்
பிரதிக்கல்விப்பணிப்பாளர் யாழ்ப்பாண
பிரதேசம் வலயம்-2

---

கல்வியைக் கண்ணெனப் போற்றும் தமிழர்தம் பாரம்பரியத்தினை அடியொற்றி, கல்விப்பணி செய்வதே தன் வாழ்வின் இலட்சியமெனக் கொண்டு கடமையாற்றி வருபவர் எமது பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் திருமிகு வ. ஆறுமுகம் அவர்கள்

துறைசார்ந்த புலமையும், கற்பித்தல் புலத்தில் நிறை

... பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் கல்வியியற்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்த அவர் யாழ்ப்பாண மக்களுக்கு பணிபுரியும் பெரு விருப்புடன் 1980-ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்று இங்கு சேவையாற்றி வருகிறார்.

கல்வித்துறையில் சிறந்த பணியாற்றிய அவரை தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசால் வழங்கப்பட்ட இலவசக்கல்வியின் தந்தையான முன்னாள் கல்வி அமைச்சர் சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா ஞாபகார்த்த பரிசிலைப் பெற்ற பெருமைக்குரிய பேராசிரியர் அவர்கள் நீடூழி வாழ்ந்து தமிழ் மண்ணுக்கும், மக்களுக்கும், சேவையாற்றி நூற்றாண்டு விழா காண வேண்டுமென்பதே எமது பெரு விருப்பமாகும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப் பீடாதிபதி,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

---

தன்னிலை தாழாமை தாழ்ந்த பின் வாழாமை இந்த வார்த்தைகள் வான்புகழ் வள்ளுவன் கூறியவை தலைமைத்துவப் பண்பிற்கு அடக்கம், அறிவு, அன்பு, நேர்மை, இதயசுத்தி என்பன ஆழமாக வேரூன்றியிருக்க வேண்டும். நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று எனக் கருத்தாழமாகக் கூறிய வார்த்தைக்கு உரமூட்ட ஒரு பெருமகனைத் தமிழ் மண்ணில் தேட வேண்டுமானால் அது சுலபம். பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, கண்டிப்பாடு, திருடாமை, தூய்மை, புலன்களின் மேல் ஆதிக்கம், திறமை, அறிவு, உண்மை, கோபமின்மை, இந்தப் பத்தும் தமது சம்பத்தாகக் கொண்ட பேரசான் திரு. வ. ஆறுமுகம் அவர்களைக் கண்டால் தேடலின் விளைவு பலித்திடும்.

கல்வியியற் பீடத்தின் தலைமைத்துவத்தை ஏற்று அஞ்சாமை தமிழனின் நெஞ்சுரம் என வாழ்ந்து வாழ்விக்கும் பெருமகன் தமது அறுபது அகவையை எட்டிப்பிடிக்கின்றார். இந்த மணிவிழா நாயகனின் மணியான வாழ்வு எமக்கெல்லாம் அணியாக அமைந்து விட்ட தெனலாம் இந்த மண்ணிலே வாழும் ஆயிரமாயிரம் கல்வியியற்துறை விருட்சங்கள் ஆறுமுகத்தின் ஆளுமைப் பசளையில் வேரூன்றி அன்பான அணைப்பில் தளிர் விட்டு அருளாட்சியில் நிழல் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நெஞ்சுக்கு நீதியும், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் கொண்டு வாழ்தலால் வெம்பகையிலாது வாழ்வு செழிக்க, கல்விப் புலம் புலர பணியாற்றக் கூடியதாகவிருக்கிறது. அர்த்தமுள்ள அறிவாற்றலரால் இந்த மண் செழிக்குமென்பதற்கு உதாரண புருஷராக விளங்கும் பேராசிரியர் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று எம்மிடை நீடு நிலவ நிமலனருள் வேண்டி அமைகின்றேன்.

இரா. சுந்தரலிங்கம்
முன்னாள் வடமாநில கல்விப் பணிப்பாளர்
யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்

---

மணிவிழாக் காணும் பேராசிரியர் திரு வ. ஆறுமுகம் அவர்களை வாழ்த்தவேண்டிய பங்கு பணி எனக்குமுண்டு அவரது இந்த மணிவிழா நாளில், அவரோடு ஒன்றாக இரத்மலானை இந்துக்கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றிய நாளின் நட்பையும் நினைவுகளையும் மீட்டுப்பார்க்கின்றேன்

கல்வியின் பொருளாதார முக்கியத்தை உணர்ந்து வாழ்பவர்கள் வடமராட்சி மக்கள். ''திரைகடலோடியும் கல்வியைத் தேடு'' என்பதே அம்மக்களின் தாரக மந்திரம் இந்த மக்கள் மத்தியில் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கும் கலைக்கோயிலாம் ஹாட்லியின் தவப்புதல்வனாய் உருவாகி, அதிபர் பூரணம்பிள்ளையின் கல்விப்பாரம்பரியத்தைப் பேணி, பல்கலைக்கழகத்தில் தனக்கென ஒரு கல்விச் சந்ததியையே உருவாக்கியுள்ள, உருவாக்கி வருகின்ற பேராசிரியர் அவர்கள் ஹாட்லியின் பண்பாட்டுப் பாரம்பரியமான ஒழுகு நீர்மத்தின் ஒரு எடுத்துக்காட்டு

அவர் வாழ்வும், கல்விப்பணியும் பல்லாண்டு தொடர என் வாழ்த்துக்கள்.

வே. நடராசா
அதிபர்- ஹாட்லிக் கல்லூரி

---

... சிலர். அவ்வரிசையில் இன்று மணிவிழாக் காணும் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் உயர்ந்தோர் உள்ளங்களைக் கவர்ந்த உத்தமர். பன்னரும் சிறப்புடைய துன்னாலையூரில் வாழ்ந்த இவரது தந்தை திரு ஆறுமுகம் வல்லிபுரம் அவர்களின் புகழை நிலமிசை நிறுவிய வகையால் இவர் ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் லெனும் சொல்'' என வள்ளுவர் வழுத்திய வாய் மொழிக்கு இலக்கியமாயமைந்தவர்.

கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரியும் அவ்வூர் திரு இருதயக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இவரை உருவாக்கி. இவரால் தங்கள் புகழை வளர்த்தவை எனலாம். இந் நெறியில் வளர்ந்த பேராசிரியர், பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ் விசேட கலைமாணியாக 1956 ஆம் ஆண்டு தொடக்கம் புகழ் பூத்து விளங்கினார்மேற்படி பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வித் தகைமை நெறியிலும், லண்டன் பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வி அக்கடமி டிப்புளோமா நெறியிலும் மேற்படி கழகத்தின் முது தத்துவ மாணி (கல்வி) யிலும் பட்டங்கள் பெற்று கலாவிற்பன்னராக விளங்கினார். தமிழீழத்தில் தோன்றிய கலா மேதைகளில் பேராசிரியர் ஆறுமுகம் அவர்களின் தோற்றம் கல்வியுலகின் பெருமகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் உண்டாக்கியது.

இத் திருமகனார் கல்வித் துறையில் ஆற்றிய சேவைகள் அளவிடற்கரியவை. படித்து முடித்து வெளிவந்த பின்னர் பன்னிராண்டு காலம் ரத்மலானை இந்துக் கல்லூரியிலும் மருதானை சஹிராக் கல்லூரியிலும் கோட்டமுனை மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராக இருந்து ஆற்றிய சேவையால் அனேகர் ஆர்வம் மிக்க கல்விமான்களாயினர். அறிவுக் கடலாகவும் ஆற்றல் முது நிலையாளராகவும் விளங்கிய பேராசிரியர் அவர்கள் அதன் பின் பேராதனை பல்கலைக் கழக உதவி விரிவுரையாளராகவும் கொழும்புப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராக, கல்வியியற்துறைத் தலைவராக கல்வியியற் துறைப் பேராசிரியராக உயர்கலை கற்போரின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். இந் நிலையில் மணிவிழாக் காணும் விழா நாயகர் உயர் திரு ஆறுமுகம் அவர்கள் இந்நாட்டில் ஈடிணையற்ற பேரறிஞர். 1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற கன்னங்கரா நூற்றாண்டு விழா வைபவத்தின் போது சிறந்த கல்வியாளருக்கு வழங்கப்பட்டு வரும் கன்னங்கரா விருது பேராசிரியர் உயர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ் - பல்கலைக் கழக ஆசிரிய சங்கத் தலைவராகவும் யாழ்ப்பாணம் தீபம் நிறுவனத் தலைவராகவும் உரும்பராய் றோட்டறி கிராமியக்குழு சனசமூக நிலையம் கோயில் பரிபாலன சபைத் தலைவராகவும் இருந்து புரிந்து வரும் பொதுப் பணிகள் அளவில்லாதன.

தமக்கென ஒரு முத்திரை; தமக்கென ஓர் ஒழுங்குமுறை; தனித்துவமான பாணி; காரியங்களைத் திறம்பட நடாத்தும் ஆற்றல் என்பவை இவரிடத்து அமைந்த ஒப்பற்ற பண்புகள். அமைதி அடக்கம் நேர்மை வாய்மை தூய்மை என்பனவற்றின் நிலைக்களனாக விளங்குபவர் இவரிடம் இந் நாடு பெற்ற பயன்கள் எழுத்தில் எழுத அடங்கா. இன்னும் பெற்றுக் கொள்ளக் கிடப்பவை பல.

இவற்றுக் கெல்லாம் நிறைந்த ஆயுளையும் சுகத்தையும் மணி விழா நாயகர் உயர் திரு ஆறுமுகம் அவர்களுக்கு இறைவன் அருள வேண்டுவோமாக.

கல்விக் கழகம்
கல்வியியற் துறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

---

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக எமது துறையின் தலைவராக விளங்கிவரும் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் இன்று தமது அறுபதாவது வயதைப் பூர்த்தி செய்து கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

சிந்தனையிற் தெளிவும் செயற் கருமங்களில் பற்றுறுதியும் கொண்டு விளங்கும் பேராசிரியர் அவர்கள் கல்வியியற்துறைக்குத் தலைவராக வாய்க்கப் பெற்றமை ஒரு வரப்பிரசாதமே. அவர் திட்டமிட்டுச் செயலாற்றும் முறையும், முன் திட்டமிட்டவாறே குறித்த நேரத்திற் குறித்த கருமங்களைச் செய்து முடிக்கும் பாங்கும் ஒவ்வொருவராலும் பின்பற்றப்படவேண்டியவை.

மானிட சமுதாயத்தின் மூன்றாவது கண்ணாக விளங்கும் ஞானக்கண்ணாம் கல்விக்கண்ணைத் திறக்கச் செய்யும் நல்லாசிரியனாக விளங்கும் பேராசிரியர் அவர்கள், தம்மை யொத்த ஆசிரியர்களை உருவாக்குவதில் காட்டும் அக்கறையும் ஆற்றும் பணிகளும் அளப்பரியன. நேரிடையாகத் தம்மிடம் போதனை பெறும் வாய்ப்புக் கிட்டாதவர்களுக்கும் கூட உதவக் கூடிய முறையில், தமது கற்பித்தல் அனுபவங்களின் சாரமாக 'வகுப்பறைக் கற்பித்தல்' எனும் அரிய நூலை எழுதி வெளியிட்டு வைத்துள்ளமைக் கூடாக எமது ஆசிரியர் சமூகம் முழுவதுமே பயனடையச் செய்துள்ளமையானது கல்விச் சேவையின்பால் பேராசிரியர் அவர்கள் கொண்டுள்ள அக்கறைக்கும் விசுவாசத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

1980 இல் இப் பல்கலைக் கழகத்துக்குப் பேராசிரியர் அவர்கள் வந்து சேர்ந்த காலந்தொட்டு ''கல்வித்துறை''யின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளமையும் 1988 இல் இத்துறையின் தலைவராக வந்தது முதல் இதன் விருத்திக்கும் விரிவாக்கத்திற்குமெனப் பாடுபட்டு வருகின்றமையும் காணும்போது, இத்தகைய ஒருவரின் தலைமையின் கீழ், அவரோடு இணைந்து செயற்படக்கிடைத்தமையை ஒரு பெரும் பேறாகவே கருதுகிறோம்.

இங்கே வந்த காலந்தொட்டு கல்வித்துறையில் கல்விமாணிப்பட்டதாரிப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவேண்டுமென்ற அவரது அயராத முயற்சி விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன், பேராசிரியர் அவர்களின் கல்விச்சேவை தொடர, நிறைந்த சுகத்தையும் நீடிய ஆயுளையும் பேராசிரியர் அவர்களுக்கு அருள வேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறோம்.

கல்வியியற்துறை விரிவுரையாளர்கள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

---

... இன்னும் எம் மண்ணில் பல்லாயிரக்கணக்கான சான்றோர்கள் ஏன் உருவாகக்கூடாது? அத்தகையதொரு தெய்வத் திருப்பணியை இதய சுத்தியுடன் செய்பவர் திரு. ஆறுமுகமாகும். இவர்தம் வழிநடத்தலில் கல்வியியற்துறையில் ஆசிரிய மாணவர்கள், பல்கலைக்கழகம் புகுந்த இளசுகள் செழித்து வளர்வதைக் காணலாம்.

பேராசிரியருக்கு அறுபது அகவை என்னும் போது. அவர்தம் 'பணிபண்பட்டு மேலும் இந்த மண்ணுக்குத் தேவை' என்ற எண்ணம் எமக்குள் முகைவிடுகின்றது. பழக இனிய, சாதாரணமான மனிதனாக பேராசிரியரைபல்வேறு நிகழ்வுகளிற் பார்த்திருக்கின்றேன். தேனூறு கிளவிக்கு வாயூறிநின்ற முருகன்போல் கல்வியியற்துறையிற் பயிலவரும் மாணவர்கள் பேராசிரியரின் பெருந்தன்மையிலும் பேராற்றலிலும் திளைத்து முனைப்பொடுமேலோங்கும் சிறப்பினைச் சொல்ல சொற்களில்லை. எண்ணிய முடிதல், நல்லவே எண்ணல், திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு என்பன பேராசிரியரின் ஒட்டுமொத்தத் தோற்றமெனலாம்.

நீவீர் நீடு நிலைபெற வாழ்த்தியமைகின்றேன்

கோ. சி. வேலாயுதம்
பிரதிக்கல்விப்பணிப்பாளர் யாழ்ப்பாண
பிரதேசம் வலயம்-2

---

கல்வியைக் கண்ணெனப் போற்றும் தமிழர்தம் பாரம்பரியத்தினை அடியொற்றி, கல்விப்பணி செய்வதே தன் வாழ்வின் இலட்சியமெனக் கொண்டு கடமையாற்றி வருபவர் எமது பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் திருமிகு வ. ஆறுமுகம் அவர்கள்

துறைசார்ந்த புலமையும், கற்பித்தல் புலத்தில் நிறைந்த அனுபவங்களும், தனது அனுபவங்களைப் பொருத்தமான சொற்பிரயோகத்தின் மூலம் முன்வைக்கும் ஆற்றலும் அவருக்கே உரியதான தனிப்பண்புகள். நடையிலும் உடையிலும் கம்பீரம் அவரது ஆளுமையின் முத்திரைகள் கற்க வேண்டியன யாவும் கற்று கற்றவழி நின்று ஒழுகி வருவதால் அவர் இன்று உன்னதமான நிலைக்கு உயர்ந்துள்ளார்.

கல்வித்துறைப் பேராசிரியராக இயங்கி, கல்வியை நெறிப்படுத்துவோரின் அன்புக்குரிய ஆசானாக விளங்கி இன்று மணிவிழாக்காணும் இக்கல்விக்கடல், மேன்மேலும் சீர்பல பெற்று சிறப்புடன் பல்லாண்டு வாழ எனது கனிவான வாழ்த்துக்கள்.

திருமதி பு. கணேசலிங்கம்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்
தென்மராட்சிக் கல்விக்கோட்டம்

---

கல்விப்பயிர் வளர்த்து, கற்பிக்க எம்மை வழிகாட்டி, ''கல்விப்பயனே பயன்'' என நிறுவிய யாழ். பல்கலைக்கழகக் கல்விப்புல பேராசிரியர் உயர்திரு வ. ஆறுமுகம் அவர்கள் அறுபதாவது அகவை எய்துவதை அறிந்து அகமகிழ்வெய்துகின்றேன். அறிவின் கருவூலம், பழகுதலில் பண்புள்ளம், அறிவுரையில் மதி அமைச்சர்; இவை அவரை ஒட்டிய பலரது எண்ணம்.

தமது மாணவரின் உயர்வில் அவர்காட்டும் அக்கறை அவரது கண்டிப்பில் எதிரொலிக்கும். பல வருடங்களுக்குமுன்பு கற்ற தன் மாணவர்களை கண்டவிடத்து அவர் பரிவுடன் அணுகும்முறை, எம்மை மெய்சிலிர்க்க வைக்கும். இத்தகைய பண்பாளர், அறிவின் விடிவெள்ளி அறுபதாவது அகவை எட்டிப்பிடித்துள்ளார். அவர் மேலும் பல்லாண்டு எம்மண்ணில் வாழ்ந்து கல்விப்பயிர் வளர்த்து நல்லாசான் பலரை நல்க வாழ்த்துகின்றேன்

பீ. அரியரட்ணம்
பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர்

---

துன்னாலை மண்ணின் தூயவனாய் ஆறுமுகம்
தன்னாலே முயன்று தனித்துவமாய்க் கலைபயின்று
எந்நாளும் கல்வி எழிலோங்க யாழ்ப்பாணக்
கண்ணாழும் பல்கலைக் கழகத்தே வீற்றிருந்து
இந்நாளில் மணிவிழாக் காணுகின்ற ஏற்றத்தால்
பொன்னார் திருவடிக்காம் பூமாலை பாமாலை
நன்நாள் இந்நாள்போல் எந்நாளும் வாழியவே!
மண்ணாள்வம் நாளைக்கே, அந்நாளும்வாழியவே!

நா. க. சண்முகநாதபிள்ளை
அதிபர் யாழ் மத்திய கல்லூரி

---

வெளியீடு: கல்விக்கழகம் கல்வியியற்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

அந்த ஒளிக்கு அந்தமேயில்லை ஏனெனில் அது கல்வியாகவே இருக்கின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' ... (சி-9135)